பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்'

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 9உ (25—7—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 10உ (26—7—67) புதன் [இதழ்: 35

கள்ள வணிகர் உரிமம் பறிமுதல்

மதுரை, ஜூலை 24—

பங்கீட்டுப் பொருள்களில் கள்ள வணிகம் நடத்தியதற்காக மூன்று நியாயவிலைக் கடைகளுக்கான உரிமம், இங்கு உணவு வழங்குதுறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தக் கடைக்காரர்கள் உணவுத் தானியங்களை விற்பதற்காகப் போலி 'பில்'களைத் தயாரித்ததாகவும் கூறப்படுகிறது.

கல்விச் சீரமைப்பு குழு அறிக்கை

க. அன்பழகன் எதிர்ப்புக் குறிப்பு

புதுடில்லி, ஜூலை 24—

கல்விச் சீரமைப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தனது அறிக்கையை இன்று இறுதியாக்கியது. இந்த அறிக்கை நாளை கல்வியமைச்சரால் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்படும்.

இதில், நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவரான திரு. க. அன்பழகன் எதிர்ப்புக் குறிப்பு ஒன்றை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

'இந்தி ஏற்கனவே தொடர்பு மொழியாக நடைமுறையில் இருந்துவருகிறது' என்றும், 'இந்தி பேசாத மாநிலங்கள் ஒப்புக்கொள்ளும்போது இந்தி ஆட்சிமொழியாக ஆகும்' என்றும் இருக்கும் சொற்றொடர்களுக்குத் திரு. அன்பழகன் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

சேலம் திட்டம்--டில்லியின் விதண்டாவாதம்

தற்போது புதிய உருக்காலை அமைக்க இயலாதாம்-- தமிழக அரசே ஏற்று நிறைவேற்றவும் முடியாதாம்!

ஜப்பானிய ஒத்துழைப்புக் குறித்தும் தகவல் இல்லையாம்

புதுடில்லி, ஜூலை 24—

சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை நிறைவேற்றக் கோரித் தமிழகத்தில் 'எழுச்சி நாள்' அமைதியாக நடைபெற்று முடிந்திருக்கும் இத்தருணத்தில், இந்திய அரசின் உருக்கு அமைச்சுத் துறையோ, தமிழகத்தின் கோரிக்கைக்கு முரண்பட்ட தகவலைத் தந்திருக்கிறது.

"தற்போதைய சூழ்நிலையில், நாட்டின் எந்த ஓர் இடத்திலும் புதிதாக உருக்குத் தொழிற்சாலை அமைக்கும் நோக்கம் இல்லை" என்னும் பழைய பல்லவியையே பாடத் தொடங்கியிருக்கிறது!

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய உருக்காலை நிறுவுவது தொடர்பாக உறுதியான அறிவிப்பு எதுவும் செய்யப்படவில்லை என்றாலும், மத்திய அரசு எவ்விதக் கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயின் கூற்றும், உருக்குத் துறையமைச்சர் சென்னா ரெட்டியின் கூற்றும் போதிய சான்றுகளாகும்.

இரு வேறு மேடைகளில் பேசிய இந்த இரண்டு அமைச்சர்களும், 'கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவில் பெரிய உருக்காலை அமைக்கக்கூடிய நிலைமை தற்போது இல்லை' என்று தெரிவித்திருக்கின்றனர்.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தாம் பதவியேற்றபின் பலமுறை டில்லிக்கு வந்து சென்றிருந்த போதிலும், அவருடன் சென்னா ரெட்டி, சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து ஒருமுறைகூட எதுவுமே விவாதிக்கவில்லையாம்!

தமிழக அரசே சொந்தமாக சேலம் உருக்காலை நிறுவக் கூடிய அளவுக்குத் தேவையான வசதிகள் கிடைக்கும் என்று திரு. சென்னா ரெட்டி கருதவில்லையாம்!

அண்மையில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், ஆந்திரத்துக்குச் சென்றிருந்தபோது, 'நாகார்ச்சுனசாகர் திட்டத்தை விரைந்து முடிக்கத் தேவைப்படும் நிதி வசதியை மத்திய அரசு அளிக்கவேண்டும்' என்று கேட்கப்பட்டபோது 'மத்திய அரசின் நிதிநிலை மிகவும் கடுமையாக இருக்கிறது' என்றும், 'ஆந்திரத்தின் கோரிக்கையை ஏற்பதற்கில்லை' என்றும், அந்தப் பகுதியில் உள்ள குடியானவர்களிடமே ரூ. 200 வீதம் முன்னதாக 'லெவி' முறையில் வசூலித்துக் கொள்ளும்படியும் கூறிவிட்டாராம்.

இந்த நிலையில், 'சேலம் திட்டத்துக்கும் அதே முறையில் பணம் திரட்ட வாய்ப்பில்லை' என்றும் கூறிய சென்னா ரெட்டி, 'இவ்வளவு பெரிய தொகையை சேலம் திட்டத்துக்காகத் தமிழக அரசு எங்கே கண்டுபிடிக்கப் போகிறது?' என்று கேட்டார்.

சேலம் திட்டத்துக்கு ஜப்பானிய ஒத்துழைப்புக் கிடைப்பது பற்றி மத்திய அமைச்சுத் துறைக்குத் திட்டவட்டமான கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லையாம்! இது குறித்து திரு. சென்னா ரெட்டிக்கு விவரம் தெரியாதாம்! எனவே, 'இதைப் பற்றிய தமது கருத்தை அறிவிப்பதற்கில்லை' என்று கூறிவிட்டாராம்!

நிதி நிலையைச் சுட்டிக் காட்டுவது சமாதானமாகாது!

தமிழக மக்களின் கோரிக்கையைத் திசை திருப்ப வேண்டாம்

பொகாரோவைத் தள்ளிப் போட்டு தென்னகத் திட்டங்களை நிறைவேற்றுக!

டில்லி அரசுக்கு அண்ணா அறிவுறுத்தல்

மதுரை, ஜூலை 24—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டம் சேர்க்கப்படும் என்று மத்திய அரசு அறிவிக்குமானால், அதுவே எனக்குத் திருப்தியளிப்பதாக இருக்கும்"

என்று சிவகங்கையில் நடைபெற்ற எழுச்சி நாள் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"ஆந்திர மாநிலமும் மைசூர் மாநிலமும் உருக்காலைகள் கோருவதைச் சுட்டிக்காட்டுவது சேலம் உருக்காலைப் பிரச்சினையைத் திசை திருப்பும் செயலாகும்"

என்று குறிப்பிட்ட அண்ணா அவர்கள், மைசூர் மாநிலத்திலுள்ள ஆஸ்பெட்டிலும், ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்திலும், தமிழ் நாட்டில் சேலத்திலும் மூன்று சிறிய உருக்காலைகள் அமைக்கப்படுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கும்' என்றும் தெரிவித்தார்.

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"பொகாரோ திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை இத்திட்டங்களுக்கு ஒதுக்கி, பொகாரோ திட்டத்தைச் சிறிது காலத்திற்குத் தள்ளிவைக்கலாம்.

நிதிப் பற்றுக்குறை, அந்நியச் செலாவணி நெருக்கடி என்பதெல்லாம் எப்போது ஏற்பட்டது? எட்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட நெருக்கடி இல்லை. விவரம் தெரிந்தவர்கள் இந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மத்திய அரசாங்கம் இதற்காக, தங்களைத் தாங்களே குறை கூறிக்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கம் தாறுமாறாக அந்நிய நாடுகளிலிருந்து கடன் பெற்று ஊதாரிச் செலவு செய்திருக்கிறது. இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்திற்கு ஐந்தரை கோடி ரூபாய் செலவழித்துவிட்ட பின, பொருளாதார சாத்தியக்கூறு—போக்குவரத்து பற்றிய சாத்தியக்கூறு ஆகியவை பற்றி தற்போது புதிதாக ஆய்வு நடத்த எண்ணுவதே தவறானதாகும். எந்தத் துறைமுகமும், கட்டி முடிக்கப்பட்ட முதல் 10—15 ஆண்டுகள் இலாபகரமாக இருக்க முடியாது.

இந்த ஆழ்கடல் துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், தென் மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் விரைவில் தொழில் வளர்ச்சி அடையும். அதன் விளைவாக பெரிய அளவில் ஏற்றுமதி வாணிபமும் அதிகரிக்கும்.

'உடனடியாக, இவ்விரண்டு திட்டங்களையும் காலந்தாழ்த்தாமல் நிறைவேற்ற மத்திய அரசாங்கம் முன்வரவேண்டும்' என்று—'தமிழக முதலமைச்சர்' என்ற முறையில் மட்டுமன்றி, பெரும்பாலான தமிழக மக்களின் 'பிரதிநிதி' என்ற முறையிலும் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

எல்லாக் கட்சிகளும் ஒருமுகமாக இந்த எழுச்சி நாளில் கலந்துகொண்டது எனக்கு மெத்த மகிழ்ச்சியை அளிக்கிறது. காங்கிரசுக் கட்சியினரும் இதில் பங்குகொண்டிருந்தால், அது எனக்கு அதிக மகிழ்ச்சியை அளித்திருக்கும்.

இந்த எழுச்சி நாள், 'தமிழக மக்கள் அனைவரும் இக்கோரிக்கைகளின் பக்கத்தில் இருக்கிறார்கள்' என்பதை மத்திய அரசுக்கு உணர்த்தும்.

இந்த முக்கியமான இரண்டு திட்டங்களுக்காகத் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து எழுச்சி நாள் கொண்டாடிய நேரத்தில், 'நாம் கலந்துகொள்ளாதது தவறு' என்று இப்போது இல்லாவிட்டாலும் இன்னும் சிறிது காலத்தில் காங்கிரசுக்காரர்கள் உணருவார்கள்."

ஆட்டோ - ரிக்ஷா

சென்னை, ஜூலை 24—

"தற்போது சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கும் ஆட்டோ -- ரிக்ஷாக்களையும், சைக்கிள் -- ரிக்ஷாக்களையும் எடுத்துவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, செய்தியாளர்களிடம் கூறினார்.

எழுச்சி நாள் - டில்லியின் பதில் என்ன?

தமிழக மக்களின் உணர்ச்சியை மதிக்க மறுத்தால்.....

தூதுக் குழு அனுப்பிவைக்க அண்ணா முடிவு

திருச்சி, ஜூலை 24—

"சேலம்—தூத்துக்குடித் திட்டங்கள் குறித்துத் தமிழக மக்களின் உள்ளத்து உணர்ச்சியை இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அறிவிக்க, விரைவில் ஒரு தூதுக்குழு டில்லிக்குச் செல்லும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"தமிழகமெங்கும் எழுச்சி நாள் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது"

என்று தெரிவித்த அண்ணா அவர்கள் மேலும் கூறியதாவது:—

"எழுச்சி நாள் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல்கள் தலைமையமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன; எனக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஓரளவு உணர்ச்சியை டில்லி அரசு புரிந்துகொண்டிருக்கும் என நம்புகிறேன்.

'தமிழ் மக்களின் ஒருமுகமான கோரிக்கைக்கு மதிப்பளித்து இத்திட்டங்களை நிறைவேற்ற டில்லி அரசு முன்வரும் என்று நம்புகிறேன்.

"இதற்கும் டில்லி செவிசாய்க்க மறுத்துவிட்டால், இன்னும் ஒரு வார காலத்தில் தி.மு.க.—மற்றும் தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக் குழு ஒன்று டில்லிக்கு அனுப்பிவைக்கப்படும்; அவர்கள், தொடர்புடைய அமைச்சர்களைச் சந்தித்து திட்டங்களை நிறைவேற்ற வற்புறுத்துவார்கள்.

படிச் செலவைக் குறைத்துக் கொள்ளும் காங்கிரசல்லாத அமைச்சர்கள்!

சண்டிகார், ஜூலை 21—காங்கிரசல்லாத ஆட்சி நிலவும் அரியான மாநில அமைச்சர்களின் சுற்றுப்பயண நாட்கள், மற்றும் நாட்படி, போக்குவரத்துப்படி ஆகியவற்றுக்கு ஓர் உச்சவரம்பு ஏற்படுத்திக் கொள்ள அமைச்சரவை முடிவு செய்தது. அமைச்சர்கள் மாதத்தில் ஒரு வாரம் மட்டுமே சுற்றுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு, முதலமைச்சர் ராவ் பிரேந்திர சிங், செய்தியாளர்களிடம் பேசுகையில், கேபினட் மதிப்புள்ள அமைச்சர்கள் ரூ. 300 வரையிலும், அமைச்சர்கள் ரூ. 250 வரையிலும், துணை அமைச்சர்கள் ரூ. 200 வரையிலும் போக்குவரத்து அல்லது நாள் படியாகப் பெற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பதாகக் கூறினர்.

காங்கிரசு அமைச்சர்களுக்குக் கல்லூரியில் ஒதுக்கிய இடம்

வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவது, பொது ஒழுக்கத்தைக் கெடுக்கிறது என்பதை இன்று பலரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

கன்னட மாநிலத்தில் அரசின் உதவியோடு தனிப்பட்டவர்களால் நடத்தப்படும், மருத்துவக் கல்லூரி ஒன்று அமைச்சர்களையே இதற்காகத் தூண்டியுள்ளது.

தேவனகெரேயிலுள்ள மருத்துவக் கல்லூரியின் நிர்வாகம், புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றி தீர்மானிக்க நேர்ந்தபொழுது, 'அமைச்சர்களுக்குவேண்டியவர்களுக்காக' என்று பல இடங்களை ஒதுக்கி வைத்ததாம்.

முதலமைச்சர், மற்றும் சுகாதாரம்—கல்வி—சட்டம் ஆகியவற்றிற்கான அமைச்சர்களுக்காக முறையே ஒவ்வொருவருக்கும் இரண்டிரண்டு இடங்களை ஒதுக்கிவைப்பது என்று அது தீர்மானம் செய்ததாம்.

காங்கிரசு நிர்வாகத்தின் நீள் துயில்!

காங்கிரசு ஆட்சியில் நிர்வாக இயந்திரம் எப்படி நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக்கிறது என்பதை விளக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் அவ்வப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இந்த வரிசையில் இன்னொரு செய்தி வெளியாகியுள்ளது.

'நாவு மத்து நம்ம நெரே' (நாமும் நமது சுற்றுப்புறமும்') என்ற கன்னடப் பாட நூல், மூன்று ஆண்டுகளுக்குமுன்பு பாட நூல் தேர்வுக் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுவரை 15,000-த்துக்கு மேற்பட்ட இதன் பிரதிகள், மும்முறை அச்சிடப்பட்டுள்ளன. இது இன்றும் பள்ளிகளில் பாட நூலாக உள்ளது.

சட்டமன்ற மேலவையில் பேசிய ஒய். எஸ். பாட்டில் என்ற உறுப்பினர், இந்த நூலிலுள்ள கணக்கற்ற அச்சுப் பிழைகளையும்—இலக்கணப் பிழைகளையும்—நூலில் ஆங்காங்கே காணப்படும் கருத்துப் பிழைகளையும் எடுத்துக் காட்டி, இதைப் பாட நூல் குழு எப்படித் தேர்ந்தெடுத்தது என்றும், இத்தனை ஆண்டுகளும் நிர்வாகிகள் கண்களில் இந்தப் பிழைகள் எப்படிப் படாமல் போய்விட்டனவென்றும் வினவியிருக்கிறார்.

பின்தங்கிய பகுதிகட்கான மேம்பாட்டுத் திட்டம்

நிதி ஒதுக்க மத்திய அரசிடம் வற்புறுத்தல்

திருச்சி, ஜூலை 22—"உத்தரப் பிரதேசத்தில் கிழக்குப் பகுதி மாவட்டங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளதுபோல் தமிழ்நாட்டில் பின்தங்கியுள்ள பகுதிகளின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை, தமிழக அரசு திட்டக் குழுவிடமும், மத்திய அரசிடமும் எடுத்துரைக்கும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரித்தார்கள்.

ஸ்டாலின் மகள் குறித்துப் புதுத் தகவல்

உலகெங்கிலுமுள்ள அரசியல் பார்வையாளர்களை உலுக்கின ஸ்வெத்லேனா விவகாரத்துடன் தொடர்பான இன்னும் சில சுவையான நிகழ்ச்சிகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

ஸ்வெத்லேனா ஓடிவருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, ஸ்டாலின் குடும்பத்தைச் சேர்ந்த இன்னோர் உறுப்பினர், அமெரிக்காவில் வந்து தங்கியிருந்தாராம்; இவருடைய பெயர் பூது ஸ்வான்டைஜ் என்றும், பல ஆண்டுகளுக்கு முன்பே இவர், 'ஸ்டாலின் என் மாமா' என்றொரு நூலை எழுதி வெளியிட்டார் என்றும் கூறுகிறார்கள்.

ஸ்வெத்லேனாவிற்கு 20 வயதாக இருந்தபொழுதே, ஸ்டாலின் அவரை ஆங்கிலம் கற்பதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பிவைத்தார் என்றும், அவருடன் இரஷ்யாவின் வெளிநாட்டு அமைச்சரும் அனுப்பப்பட்டிருந்தார் என்றும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இந்தி வெறியர்களின் நோக்கம் புரிகிறதா?

"அண்மையில் சட்டமன்றத்தில் ஆங்கிலோ—இந்தியர்களின் பிரதிநிதி, ஆங்கிலப் பள்ளிகளுக்கு ஆதரவாகப் பேசத் தொடங்கியபொழுது, நமது (மைசூர் மாநில) கல்வியமைச்சர் வெளிநடப்புச் செய்தார்.

"நமது கல்வியமைச்சர்கள் இந்தித் திணிப்பைப்பற்றியோ, மத்திய அரசில் உள்ள சில அமைச்சர்கள் ஆங்கிலத்தின் மீது தொடுத்துள்ள போராட்டத்தைப் பற்றியோ சரிவர உணர்ந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

"நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசும்பொழுது விபூதி மிஸ்ரா என்ற உறுப்பினர், 'இந்தியை விரைவில் ஆட்சிமொழி ஆக்க வேண்டும்' என்றும், (நேருவின் வாக்குறுதியைச் சட்டமாக்கும்) 'மொழிபற்றிய மசோதாவிற்கு உறுப்பினர்கள் ஆதரவு தரமாட்டார்கள்' என்றும் பேசியிருக்கிறார்.

"மேலும் அவர் பேசுகையில், 'இந்திப் பகுதிகளில் உள்ளவர்களைக் காட்டிலும், இந்தி பேசப்படாத பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஆங்கிலத்தில் நிறையப் புலமை இருப்பதால் மத்திய அரசு வேலைகளில் அவர்களுக்கு அதிக இடங்கள் கிடைக்கின்றன' என்றும் கூறியிருக்கிறார்.

"இதிலிருந்து தெரிவதென்ன? தேசிய ஒருமைப்பாடு—அது, இது—என்றெல்லாம் இந்தி வெறியர்கள் கூறுவது வெறும் பொய். அவர்களை உண்மையில் வருத்திக்கொண்டிருப்பது எது என்பது இப்பொழுது புரிகிறதல்லவா?"

—('டெக்கான் ஹெரால்டு' நாளிதழில் (21—7—67) ஏ. எஸ். கே. மூர்த்தி என்ற வாசகர் எழுதியுள்ள கடிதம்)

சேலத்து இரும்பு!

[இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.]

சேலம் இரும்பாலைத் திட்டம், நீண்டகாலமாக ஒரு 'காகிதத் திட்ட'மாக இருந்துவருகிறது. இந்த நிலை மாறி, 'உருவான திட்டம்' நடைமுறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்துவிட்டன; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது!

இந்த ஐந்தாண்டுத் திட்டங்களில், 'சேலம் இரும்பு' பற்றிய பெயர்களும், நம்பிக்கைகளும் தரப்பட்டனவேயன்றி, உருவான திட்டம்—திட்டத்துக்கான நிதி தரப்படவில்லை!

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் போடப்பட்ட மொத்தப் பணம் 20,591 கோடி ரூபாய்! இதில், இரும்புத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட பணம் 960 கோடி ரூபாய்!

இந்த 960 கோடி ரூபாயில் பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் இரும்பாலைகள் உருவாயின! சேலம் மட்டும் மறக்கப்பட்டுவிட்டது!

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் உருப்பெறவில்லை. 22,500 கோடி ரூபாய் மொத்த முதலீடு என்று கூறப்படுகிறது.

இந்த நான்காவது திட்டத்தில், 1,450 கோடி ரூபாய் மேற்கொண்டு இரும்பாலைகளுக்கு ஒதுக்கப்படப் போகிறது! அதில் பொகாரோ இரும்பாலைக்கு 648 கோடி ரூபாய் இருக்கிறது; பிலாய் இரும்பாலையை விரிவுபடுத்த 111 கோடி ரூபாய் இருக்கிறது; ரூர்கேலாவை விரிவுபடுத்த 147 கோடி ரூபாய் இருக்கிறது; துர்க்காபூரை விரிவுபடுத்த 374 கோடி ரூபாய் இருக்கிறது!

போட்ட இரும்பாலைகளை விரிவுபடுத்துகிறார்கள்—புதிய இரும்பாலையை உண்டாக்குகிறார்கள்! ஆனால் சேலம் இரும்பாலை பற்றிக் கேட்டால், 'பணம் இல்லையே' என்று கையைப் பிசைகிறார்கள்!

சேலம் இரும்பாலைக்குக் கேட்கப்பட்ட பணம்—தஸ்தூர் கம்பெனி அறிக்கைப்படி—96 கோடி ரூபாய்தான்!

நான்காவது திட்டத்தையும் சேர்த்துப் பார்த்தால், மொத்தப் பணம் திட்டங்களுக்காகப் போடப்படுவது, 43 ஆயிரம் கோடி ரூபாய்களுக்குமேல்!

43 ஆயிரம் கோடி ரூபாயில், ஒரு 96 கோடி ரூபாய்க்கு வழிவகை செய்ய முடியவில்லையா?

மற்ற இரும்பாலைத் திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, 'சேலம் திட்டம் இலாபகரமானது—பல வழிகளில்' என்று சொல்ல வேண்டும்.

தஸ்தூர் அறிக்கைப்படி, மொத்தம் போடப்படும் முதலீட்டுக்கும் அதில் தயாராகும் இரும்பின் அளவுக்கும் விகிதம் போட்டதில், 'சேலம் இரும்பாலைதான் குறைந்த செலவு' என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு டன் தயாரிப்பு அளவுக்குப் போடப்படும் முதலீடு :—

ரூர்கேலா	ரூ. 2,145
துர்க்காபூர்	ரூ. 2,270
பிலாய்	ரூ. 2,208
சேலம்	ரூ. 2,130

ஒரு டன் அளவுக்கு துர்க்காபூரைவிட சேலத்தில் 140 ரூபாய் குறைகிறது; அதாவது, 'ஐந்து இலட்சம் டன் இரும்பு தயாரிப்பதில், துர்க்காபூரைவிட சேலம் இரும்பாலைக்கு 7 கோடி ரூபாய் குறைவாக முதலீடு போட்டால் போதும்' என்று பொருள்!

முதலீடு 7 கோடி ரூபாய் மிச்சமாவது மட்டுமல்ல—அதற்கு 6 சதவீத வட்டி என்றால்கூட, ஆண்டுக்கு 42 இலட்சம் ரூபாய் மிச்சமாகும்.

முதலீட்டில் மிகக் குறைவானது சேலம்! இருந்தாலும், 43,000 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைப் போடுகிற மத்திய அரசு, 'சேலம் திட்டம்' என்றதும், கண்ணை மூடிக்கொண்டு விடுகிறது!

மற்ற திட்டங்களுக்கு இல்லாத ஒரு நல்ல சூழ்நிலை, சேலம் திட்டத்துக்கு இருக்கிறது!

மற்ற திட்டங்களில் இரும்பு அருகே இருந்தால் நிலக்கரி அருகே இருக்காது; சுண்ணாம்பு தேடி பல நூறு மைல்கள் செல்லவேண்டியிருக்கும்; மற்ற மூலப் பொருள்கள் தொலைவிலிருந்து வரவேண்டியிருக்கும்!

எடுத்துக்காட்டாக, பிலாய் இரும்பாலைக்கு வரவேண்டிய இரும்புக் கனி, பிலாயிலிருந்து 55 மைல் தூரத்திலிருக்கும் 'ராஜகிரி' என்ற இடத்திலிருந்து வருகிறது!

சேலம் இரும்பாலை, இரும்புக் கனி வளம் கிடைக்கும் கஞ்சமலைக்கு அருகிலேயே உருவாக்கப்படப் போகிறது! தூரம் 7 மைல்களுக்கு மேலிருக்காது!

நிலக்கரியைப் பெற பிலாய் இரும்பாலையிலிருந்து 450 மைல் தூரம் செல்லவேண்டியுள்ளது.

சேலம் இரும்பாலைக்கு வேண்டிய பழுப்பு நிலக்கரி, 103 மைல் தூரத்திலுள்ள நெய்வேலியில் இருக்கிறது!

சுண்ணாம்புக் கல்லைப் பெறும் இடம், பிலாய் தொழிற்சாலையிலிருந்து 16 மைல் தூரத்திலிருக்கிறது!

சேலம் இரும்பாலைக்கு வேண்டிய சுண்ணாம்புக் கல், 'சங்கரிதுர்கம்' (24 மைல்) என்ற இடத்தில் இருக்கிறது!

மாங்கனீஸ் என்ற பொருள், பிலாய் தொழிற்சாலைக்கு 40 மைல் தொலைவிலிருந்து வருகிறது!

அதற்குப் பதிலாக உள்ள பாக்சைட், 29 மைல் தூரத்திலிருந்து சேலத்திற்குக் கிடைக்கிறது!

பிலாய் தொழிற்சாலைக்கு வேண்டிய தண்ணீர் 50 மைல் தூரத்திலுள்ள ஒரு நீர்த் தேக்கத்திலிருந்து வருகிறது!

சேலம் இரும்பாலைக்கு வேண்டிய தண்ணீரை 17 மைல் தூரத்துள்ள மேட்டூர் தேக்கத்திலிருந்து கொண்டுவரலாம்!

இவ்வாறு இரும்பாலைக்குத் தேவையான மூலப் பொருள்கள், மற்ற இரும்பாலைகளைவிட சேலம் இரும்பாலைக்கு மிக அருகில் இருக்கின்றன!

இயற்கையின் கனி வளம், சேலத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது! மததிய அரசின் நிறுவனம் மட்டும் சேலம் பக்கத்தில் இதுவரை இல்லை!

சேலம் இரும்பாலை பற்றி ஆராய்ந்தவர்கள், '5 இலட்சம் டன் அளவு உற்பத்தி செய்யக்கூடிய இரும்பாலையை அங்கு அமைக்கலாம்' என்று கூறுகிறார்கள். இது, முதல் கட்டம்; இரண்டாவது கட்டமாக 12 இலட்சம் டன் அளவும், மூன்றாவது கட்டமாக 30 இலட்சம் டன் அளவும் விரிவுபடுத்தலாம்—என்று கூறுகிறார்கள்.

ஆராய்ந்தவர்கள் தருகிற மதிப்பீடுகளைக் கேட்கும்பொழுது இனிமையாகத்தான் இருக்கிறது; மூன்று கட்டத்தில் 30 இலட்சம் டன் அளவுள்ள பெரிய இரும்பாலையை சேலத்தில் உருவாக்கலாம்!

மூன்று கட்டமல்ல—முதல் கட்டத்துக்கு வேண்டிய முதலுக்கே மத்திய அரசு இதுகாறும் தட்டிக் கழித்துவந்திருக்கிறது!

30 இலட்சம் டன் அளவுள்ள பெரிய இரும்பாலையைச் சேலத்தில் அமைக்கும்படி ஆராய்ச்சியாளர் கூறுவதற்குக் காரணம், 'சேலம் பகுதியைச் சுற்றி இரும்பாலைக்கு வேண்டிய கனி வளம் ஏராளமாகப் பரவி கிடக்கிறது—புதைந்து கிடக்கிறது' என்பதால்தான்!

சேலம்—திருச்சிப் பகுதியில் உள்ள இருக் கனி வளத்தின் கணக்கு 37,00,00,000 டன் அளவு (37 கோடி டன் அளவு)!

அதன் அமைப்பின் விவரமாவது :—

இடம்	இரும்புக் கனியின் அளவு		
கஞ்சமலை	12 கோடி	20 இலட்சம்	டன்
கொடுமலை	1 ,,	20	,,
பெருமாமலை	1 ,,		
ஆத்தூர் பகுதி	1 ,,	20	,,
சித்தேரிமலை	5 ,,	50	,,
தீர்த்தமலை	4 ,,	80	,,
இராசிபுரம்—நாமக்கல் பகுதி	3 ,,	40	,,
கொல்லிமலை	6 ,,	80	,,
பச்சைமலை	1 ,,	10	,,
	37 கோடி	20 இலட்சம்	டன்

"இன்னும் விரிவாக ஆராய்ந்தால், இதைப் போன்று இரண்டு பங்குக்கு மேல் இரும்புக் கனி வளம் கிடைக்கும்" என்று நிலவள ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்!

பழுப்பு நிலக்கரி, நெய்வேலிப் பகுதியில் 260 சதுர மைல்களுக்குப் பரவியிருக்கிறது! அங்கு புதைந்து கிடக்கும் பழுப்பு நிலக்கரியின் அளவு 200 கோடி டன்!

சேலம் இரும்பாலை அமைத்தால், ஆண்டுதோறும் தேவைப்படும் நிலக்கரியின் அளவு, 5 இலட்சத்து 30 ஆயிரம் டன்தான்!

சுண்ணாம்புக் கல்—சங்கரிதுர்கம், லால்குடிப் பகுதிகளில் 1 கோடி டன் அளவுக்குப் பரவியிருக்கிறது!

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னைத் தீவிபத்து நிவாரண நிதி

ஆமதாபாத்வாழ் தமிழர்களின் உதவி

தமிழகத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஆமதாபாத்—மணிநகர் எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் 16—7—67 அன்று உண்டியல் வசூல் நடைபெற்றது. ஏனைய நிறுவனங்களும் பங்குகொண்டு நிதி வசூலித்த தொகை, பகுதிவாரியாக விவரம் :—

மணிநகர்	ரூ. 671.01
நரோடா	ரூ. 115.34
பாப்புநகர்	ரூ. 100.01

ஆக மொத்தத் தொகை ரூ. 886.35. இதில் செலவு நீக்கி ரூ. 845, தமிழக முதலமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

வங்கத் தமிழர் சங்கம்

"கல்கத்தா (அவுரா) வங்கத் தமிழர் சங்கம் இந்நகரிலேயே முதன்முதலாக நடத்திவரும் இலவசத் (தமிழ்) தொடக்கப் பள்ளியின் வளர்ச்சிக்கும் சொந்தக் கட்டிட நிதிக்குமாகத் தமிழர்கள் அனைவரிடத்திலும் நன்கொடை கேட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலும், தமிழகத்தில் தீ விபத்தால் அல்லல்படும் தமிழர்களின் அவதிகண்டு ரூ 210-ஐ, தமிழக முதல்வர் அண்ணா அவர்களுக்கு அனுப்பியுள்ளது" என்று, துணைச் செயலாளர் செ. வீரபத்திரன் அறிவிக்கிறார்.

கழகச் சட்டமன்ற உறுப்பினர் காணிக்கை

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்காக ஓமலூர் தொகுதிச் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர் தோழர் சி. பழனி, தமது நாள் படியான 15 ரூபாயையும், தமது ஊதியத்தில் 51 ரூபாயும் சேர்த்து 66 ரூபாயை முதலமைச்சர் அண்ணாவுக்கு அனுப்பிவைத்தார்.

சென்னை 4-வது வட்டம்

சென்னை 4-வது வட்ட மக்கள் திலகம் ரசிகர் மன்றத்தின் சார்பில் வட்ட தி.மு.க. செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில் உண்டியல் ஏந்தி வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 101-ஐ 15—7—67 அன்று வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி, மன்றத் தோழர்கள் மணிமாறன், சொக்கலிங்கம் ஆகியோர் முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் கொடுத்தனர்.

சென்னை 82-வது வட்டம்

மயிலைத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டி 5—7—67-ல் மயிலை 82-வது வட்டத்தில் தோழர்கள் எஸ். வி. வேலு, எம். கே. கபாலி, கோ. கன்னியப்பன், தமிழ் மணி, பி. சீனிவாசன், புலமைப் பித்தன், பி. குப்புசாமி, மற்றும் பல தோழர்கள் நிதி வசூலித்தார்கள்.

வசூலித்த மொத்தத் தொகை ரூ. 325.52. இத்தொகை, மயிலைப் பகுதிச் செயலாளர் எஸ்.வி. வேலு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

82-வது வட்டத்திலுள்ள ரீட்டா ஐஸ் கம்பெனி தொழிலாளர்கள் சார்பாக பாபுலால் மூலம் ரூ. 155.05, மயிலைப் பகுதிச் செயலாளர் எஸ். வி. வேலு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கோத்தகிரி தி.மு.க.

17—7—67-ல், கோத்தகிரி நகரப் பஞ்சாயத்து முதலாவது வார்டு ஒரசோலை கிளைக் கழகச் சார்பில் ரூ. 101, சென்னைத் தீ விபத்து நிவாரண நிதிக்காக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு மணியார்டர் மூலம் அனுப்பியுள்ளதாகச் செயலாளர் ஜே. இராமன் அறிவிக்கிறார்.

* * *

ஒரசோலை சுதந்தராக் கட்சிப் பிரமுகர் திரு.ஜே.பி. ஹால கவுடர், சென்னைத் தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ. 50-ஐ முதலமைச்சர் அண்ணா அவர்கள் பெயருக்கு அனுப்பியுள்ளார்.

ஜாரிகொண்டலாம்பட்டி பேரூராட்சி நிதியுதவி

ஜாரிகொண்டலாம்பட்டி நகரப் பஞ்சாயத்தின் அவசரக் கூட்டம் தலைவர் வெ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, சென்னை நகரில் அடுத்து அடுத்து நேர்ந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இப்பஞ்சாயத்தின் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்காக இப்பஞ்சாயத்து பொது மக்கள் சார்பில், பஞ்சாயத்து நிதியிலிருந்து தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு ரூ. 1001 நன்கொடை அளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பெங்களூர் கூட்டுறவுச் சங்கம்

தீ விபத்தினால் வாடும் குடும்பங்களுக்காகத் தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பெங்களூர்—அனுமந்தாபுரம் பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கச் சார்பில் ரூ. 50 அனுப்பப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் தெரிவிக்கிறார்.

அதே நிதிக்கு மேற்படி சங்கத்தின் நிர்வாகிகள், மற்றும் இயக்குநர்கள், சங்க ஊழியர்கள் சேர்ந்து நன்கொடையாக ரூ. 100 அனுப்பியுள்ளனர்.

அதேபோல், பீகார் மாநில நிவாரண நிதிக்காக ரூ. 50 அனுப்பப்பட்டுள்ளது.

பெங்களூர் எம்.ஜி.ஆர். மன்றம்

பெங்களூர் 11-வது வட்ட இலட்சுமி நாராயணபுரம் எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் சென்னைத் தீ விபத்து நிவாரண நிதியாக ரூ. 85.39-ம் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகச் செயலாளர் பி. எஸ். மணி அறிவிக்கிறார்.

கீழ்வேளூர் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம்

கீழ்வேளூர் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றச் சார்பில் ரூ 51 முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு 15—7—67 அன்று மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாக சங்கத் தலைவர் அறிவிக்கிறார்.

கலைக் குழு முகவரி

இராசப்பா குழுவினரால் டேப் இராமச்சந்திரன்—சாந்தா அளிக்கும் நாமக்கல் தாசன் தீட்டிய 'கோட்டைவிட்ட கோமான்கள்'—தி. மு. க. கலாநிகழ்ச்சி நடத்த விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்க :—

டேப் இராமச்சந்திரன்,
13, கவுஸ் மொய்தீன்பேட்டை
2-வது சந்து, சென்னை-13

4.71 இலட்சம் ஏக்கரில் விளைச்சல் இரட்டிப்பு

தமிழக அரசின் தீவிர உணவுப் பெருக்கத் திட்டம்

கோவை, ஜூலை 23—

சுமார் 4.71 இலட்சம் ஏக்கரில் விளைச்சலை இரட்டிக்கத் தமிழக அரசு போட்டுள்ள திட்டத்தின் மூலம் கூடுதலாக 8 இலட்சம் டன் நெல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் நாலரை இலட்சம் ஏக்கரும், சாத்தூரில் 12,000 ஏக்கரும்; கிருஷ்ணகிரியில் 9,000 ஏக்கரும் இந்தத் திட்டத்தின் கீழ் வரும்.

பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான மானியத்தை ஆகஸ்டு முதல் 25 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்த அரசு எண்ணியிருப்பதாகவும், விவசாயிகளுக்கான கடன்களை ஒரு மாதத்திற்குள் கொடுத்து முடித்துவிடுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கூறினார்.

யாருக்குச் சொந்தம்?

சென்னை கமிஷனர் அலுவலகத்தில் ஜூன் 30-ம் நாள்வரை உரிமை கோரப்படாமல் இருக்கும் சைக்கிள், துணி போன்ற பொருகள், ஆகஸ்டு 20-ந் தேதியோ, அதற்குப் பிறகோ விற்பனை செய்யப்பட்டுவிடும்.

இவற்றை உரிமைக் கொண்டாடக்கூடியவர்கள், இந்தத் தேதிக்குமுன் போலீசு கமிஷனரிடம் சென்று தங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

சிறையில் இருக்கும் புதுவை இந்தி எதிர்ப்புத் தொண்டர்

குடும்பத்துக்கு வட்டக் கழக உதவி

புதுவையில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத் தொடர்பாகக் கழக ஆதரவாளர் வைத்திலிங்கம் என்பவர், $1\frac{1}{2}$ ஆண்டுக் கடுங்காவல் தண்டனை ஏற்றார்.

அவரை விடுதலை செய்யக் கோரியும், அவருடைய குடும்பத்துக்கு உதவி கோரியும் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு ஓர் மடல், அவருடைய துணைவியாரால் அனுப்பப்பட்டுள்ளது.

அண்ணா அவர்களைக் காணச் சென்றிருந்த புதுவை வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகத்திடம் அண்ணா அவர்கள், அக்குடும்பத்திற்கு உதவிசெய்யுமாறு தெரிவித்தார்.

அதன்பேரில் சண்முகம் அவர்கள், வைத்திலிங்கம் மனைவியாரிடம் ஒரு மூட்டை நெல்லும், 10 ரூபாயும் முதல் தவணையாகக் கொடுத்தார்.

2—7—67-ல் நடைபெற்ற வட்ட தி. மு. க. குழுவில், அண்ணா அவர்கள் சொன்னதை எடுத்துச் சொன்னவுட வட்டக் கழக நிதியிலிருந்து ரூ. 50-ம், சண்முகம் ரூ. 25-ம், கழகத் தோழர்கள் ரூ. 25 ஆக ரூ. 100 திரட்டி அரியநகர் செயலாளர் ஆ. கந்தசாமி அவர்களிடம் கொடுக்கப்பட்டது; அவர் அத்தொகையை அந்தக் குடும்பத்துக்குக் கொடுத்தார்.

கலைக்கப்பட்ட நெல்லை, அருப்புக்கோட்டை நகராட்சிகள்

செப்டம்பர் முதல் இயங்கும்

மதுரை, ஜூலை 23—

"காங்கிரசு ஆட்சியில் கலைக்கப்பட்ட நெல்லை, அருப்புக் கோட்டை நகராட்சி மன்றங்கள் வரும் செப்டம்பர் திங்கள் முதல் இயங்கத் துவங்கும்"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறினார்.

தேர்வுக் குழு

அவர் மேலும் கூறுகையில், மாநிலத்தில் உள்ள நகராட்சிகளின் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க ஊழியர் தேர்வுக்குழு ஒன்றை ஏற்படுத்தலாமா என்பது குறித்தும் அரசு ஆய்வு செய்துவருவதாகத் தெரிவித்தார்.

கள்ளிப் பெட்டிக்குள் அரிசி அனுப்பினர்

'சோப்பு' என்று சொல்லி இரயில்மூலம் கடத்தல்

பாலக்காடு, ஜூலை 23—

'சோப்பு' என்று சொல்லி கள்ளிப் பெட்டிக்குள் அரிசியை வைத்து இரயில்மூலம் கேரளத்துக்கு அனுப்பப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் திருமங்கலத்திலிருந்து கோழிக்கோடு அருகிலுள்ள கடலுண்டிக்கு 100 கள்ளிப் பெட்டிகள் இரயில்மூலம் அனுப்பப்பட்டன. இவற்றை குறுகிய பாதை (மீட்டர்கேஜ்) இரயில் வண்டியிலிருந்து அகலப் பாதை (பிராட்கேஜ்) வண்டிக்கு மாற்றிக்கொண்டிருக்கும் போது, ஒரு பெட்டிக்குள்ளிருந்து அரிசி வெளியே சிந்தியதாம்; இதைக் கண்ட இரயில்வே ஊழியர், ஸ்டேஷன் மாஸ்டரிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

உடன் அந்தப் பெட்டியை உடைத்துப் பார்த்தபோது, அதன் உள்ளே அரிசி நிரப்பப்பட்டிருப்பது தெரியவந்ததாம். ஏறக்குறைய 75 பெட்டிகளில் அரிசி இருப்பதாகத் தெரியவந்தது.

இந்தப் பெட்டிகளுக்குச் சீலிடப்பட்டுள்ளது.

வரிப் பளுவைக் குறைக்கவே அரசுடைமையாக்கும் கொள்கை

'இதில் அரசியல் கண்ணோட்டம் எதுவுமில்லை'—முதலமைச்சர் அண்ணா விளக்கம்

வேலூர், ஜூலை 22—

"அதிகமாக வரி விதிக்காமலே அதிக வருமானத்துக்கு வழி தேடிக் கொள்ளுவதுதான்—தொழில்களை அரசுடைமையாக்குவதன் ஒரே நோக்கமாகும்; இதில், அரசியல் கண்ணோட்டம் எதுவும் கிடையாது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெளிவுறக் கூறினார்கள். அவர் மேலும் கூறியதாவது:-

"பஸ் தொழிலை அரசுடைமையாக மேற்கொள்ளும்போது, பஸ் போக்குவரத்துக்களை நடத்துவதில் உதவி செய்ய 'ஆலோசனைக் குழு'க்களை நிறுவ அரசு உத்தேசித்திருக்கிறது; இக்குழுக்களில், இப்போதைய பஸ் அதிபர்கள் இடம் பெறுவர். பஸ் அதிபர்களுக்கு இத்தொழிலில் அனுபவமும் திறமையும் உண்டு; எனவே, இத்துறையில் அவர்களுடைய ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"பஸ் தொழில் நடத்திவருபவர்களுக்குப் புதிய தொழில்களை அரசு துவக்கித் தரும்; எனவே, பஸ் போக்குவரத்து அரசுடைமையாகும்போது, பஸ் அதிபர்கள், நட்டாற்றில் விடப்படமாட்டார்கள்."

சேலத்து இரும்பு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இரும்பு ஆலைக்குத் தேவைப்படும் மாக்னசைட் என்னும் பொருள், சேலத்துக்கு அருகிலுள்ள சுண்ணாம்பு மலையில் இருக்கிறது. மொத்தம் உள்ளே புதைந்து கிடைப்பது 8 கோடி டன் அளவாகும்!

இந்தியாவிலுள்ள அளவிலும் உற்பத்தியிலும், 100-க்கு 95 பங்கு இங்குதான் கிடைக்கிறது!

சுண்ணாம்பு மலையில் புதைந்துள்ள மாக்னசைட் கனியின் அளவு 8 கோடி டன் என்றாலும், சேலம் இரும்பாலைக்கு ஆண்டுதோறும் தேவைப்படுவது 15 ஆயிரத்து 500 டன்தான்!

இரும்பாலை அமைப்பதற்கான இரும்பு—நிலக்கரி—சுண்ணாம்பு — மாக்னசைட் போன்ற எல்லாக் கனிவகைகளும், சேலம் பகுதியில் நிரம்ப இருக்கின்றன!

கனிகளை உருக்கி இரும்பு ஆக்குவதிலும் சேலம் திட்டம்தான் அதிகப் பலன் தருவது ஆகும்!

மற்ற இரும்பாலைகளில், உருகிய கனிகளில் 100-க்கு 75 பங்குதான் இரும்பாக வெளிவரும்; மற்றவை கழிவுப் பொருளாகிவிடும்.

சேலம் இரும்புத் திட்டத்தில், உருகிய நிலையிலிருந்து 100-க்கு 85 பங்கு இரும்பு கிடைக்கும். மற்ற இரும்பாலைகளைவிட இது, 10 சதவீதம் கூடுதலான பலன்!

மற்ற புதிய திட்டங்கள் உள்ள நிலையில்—இன்று வேலைகளைத் துவக்கினால்கூட—ஆலை அமைந்து, இரும்பு வெளிவர $7\frac{1}{2}$ ஆண்டுகள் பிடிக்கும்!

சேலம் இரும்பாலைத் திட்டத்துக்கு பலவித முன் வேலைகள் நடைபெற்றுள்ளதால், இன்னும் $3\frac{1}{2}$ ஆண்டுக்காலத்தில் இரும்பு உற்பத்தியைக் கண்ணால் காணலாம்!

ஓர் இரும்பாலையைத் துவக்குவதற்குத் தேவையான எல்லா வசதிகளும் சேலம் பகுதியில் இருக்கின்றன.

குறைந்த முதலீடு—
நிறைந்த கனி வளங்கள்—
தூரக் குறைவு—
அதிகப் பலன்—
குறுகிய கால அளவு

இவ்வளவு வாய்ப்புக்கள் இருந்தும், கனி வளம் புதைந்துகிடக்கிறது — உறங்கிக்கொண்டிருக்கிறது!

புதைந்துகிடக்கும் கனி வளத்தை எழச்செய்ய இந்த எழுச்சி நாள் கொண்டாடப்படுகிறது! இது, உணர்வின் எழுச்சி—உழைப்பின் எழுச்சி — நாட்டின் எழுச்சி — மக்களின் எழுச்சி!

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல்

டாக்டர் எச்.வி.ஹாண்டே, தமிழகச் சட்டமன்றத்திற்கும், திரு. க. அன்பழகன் நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மேலவையில் காலி ஏற்பட்டுள்ள அவர்களது இடங்களுக்கு இப்பொழுது, சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதியிலிருந்தும், சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியிலிருந்தும் இடைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

இவற்றிற்கு விண்ணப்ப மனு அனுப்பவேண்டிய கடைசி நாள் ஜூலை 26; மறுநாள் மனுக்கள் பரிசீலனை நடக்கும். மனுக்களைத் திரும்பிப் பெற்றுக்கொள்வதற்கான கடைசி தேதி ஜூலை 29. போட்டியிருந்தால், ஆகஸ்டு 21-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவு நேரம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை.

அணுசக்தித் தொழில் விரிவதால் ஏற்படும் அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்ய உலகெங்கிலும் யுரேனியப் படிவங்களைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டுமென்று ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

இன்சூரன்சு ஊழியர் வேலை நிறுத்தம்

இயந்திரத் திணிப்பை எதிர்த்து நடவடிக்கை

சென்னை, ஜூலை 25—

நாடெங்கிலும் நாற்பதினாயிரம் ஊழியருக்கும் அதிகமாக—அனைத்திந்திய இன்சூரன்சு ஊழியர் சங்கத்தின் செயற்குழுவின் முடிவின்படி—மின் அணி இயந்திரங்கள் எல். ஐ. சி.-யில் நுழைவதை எதிர்த்து இன்று மீண்டும் ஒரு முறை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

இதேபோல் சென்ற ஆண்டு நவம்பர் 25-ல் நாடெங்கிலும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்.

ஊழியர் அனைவரும் தம் ஒருமித்த குரலில் எதிர்ப்புணர்ச்சியை எழுப்பியபோதிலும் எல். ஐ. சி.-நிறுவனம் கேளாக்காதினராக எதிர்ப்புணர்ச்சியை அலட்சியம் செய்ததுடன், எல். ஐ. சி. யில் கல்கத்தாவில் மற்றுமோர் மின் அணு இயந்திரத்தை நிறுவுவதில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

மத்திய அரசினரின் மின் அணுமயமாக்கும் கொள்கையும் எந்தவித மாறுதலுமின்றி மாருக வளர்ந்துவருகிறது.

மிகச் சாதாரண எழுத்தர் வேலைக்கு மிக விலை உயர்ந்த மின் அணு இயந்திரங்கள் அரசு அலுவலகங்களிலும், பாங்கிகளிலும், இரயில்வே அலுவலகங்களிலும் புகுத்தப்படவிருக்கின்றன.

இங்கிலையில்,தாம் மேற்கொண்ட—'மின் அணு இயந்திரங்கள் எல். ஐ. சி. அலுவலகங்களிலிருந்து அறவே ஒழிக்கப்படவேண்டும்' என்ற இலட்சியத்தின் அடிப்படையில் முழு வெற்றியடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிலைக்கு ஊழியர் யாவரும் தள்ளப்பட்டனர்.

தமிழகம் முழுவதற்கும் படி அரிசித் திட்டம்

படிப்படியாகச் செயல்படுத்த நடவடிக்கை

திருச்சி, ஜூலை 22—

"சென்னையைச் சுற்றியுள்ள இடங்களுக்கும், கோவையைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் ஆகஸ்டு 15-ம் நாள் முதல் ரூபாய்க்கு ஒரு படி அரிசி தருவோம்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினர்.

தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் பதிலளித்துக் கூறியதாவது:—

"சென்னை, கோவை ஆகிய இடங்களில் தற்போது ரூபாய்க்கு ஒரு படி அரிசி வீதம் கொடுக்கிருேம; அடுத்த மாதம் 15-ம் நாள் முதல் சென்னையைச் சுற்றியுள்ள இடங்களிலும், கோவையைச் சுற்றியுள்ள இடங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்போகிருேம்.

இப்போது அரசின் கிடங்குகளில் நிறைய அரிசி இருக்கிறது. இன்னும் மூன்று மாதங்களில் குடும்பக் கார்டு உள்ள இடங்களில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம்.

குடும்பக் கார்டு முறை அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆகவே, தமிழ்நாடு முழுவதும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி நிச்சயம் கொடுக்கப்படும்."

மாவட்டப் பிரிவினை

மாவட்டப் பிரிவினை பற்றி அண்ணா அவர்கள் கருத்தறிவித்ததாவது:—

"புதுக்கோட்டை தனி மாவட்டமாக்கப்படவேண்டுமென, அங்குள்ள மக்கள் நீண்டகாலமாக கேட்டு வருகின்றினர்.

"இதேபோல், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு தனி மாவட்டம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையுமுள்ளது. தற்போது செங்கற்பட்டு மாவட்டத் தலைநகர் சென்னையிலேயே உள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தமது மாவட்டத் தலைநகரை இராமநாதபுரத்துக்கே மாற்ற வேண்டுமெனக் கோரினர்கள். இந்தக் கோரிக்கைகளை அரசு கவனமாக ஆராய்ந்துவருகிறது. இதுவரை முடிவேதும் எடுக்கப்படவில்லை."

விலையைக் குறைக்கத் தமிழக அரசு முயற்சி

மத்திய அரசு முட்டுக்கட்டை

வேலூர், ஜூலை 23—

"இன்றியமையாப் பண்டங்களின் விலையைக் குறைக்க மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முட்டுக்கட்டை போடுகிறது"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், செங்கம் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் கூறியதாவது:—

"விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்குமானல், சர்க்கரை விலையை உடனே குறைத்துவிடுவோம்.

"மணிலாக்கொட்டையும், வெல்லமும் ஏற்றுமதி செய்வதால் விலைவாசி உயரத்தான் வழி ஏற்படுகிறது.

"மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாததனல்தான் ஒன்றும் செய்ய முடிமவில்லை.

"மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று தொடர்ந்து மத்திய அரசுடன் போராடுவோம்; இதற்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

26--7--67

சென்னை 27-வது வட்டம்

தி.மு.க.—மற்றும் துணை மன்றங்கள் சார்பில் இரவு 7 மணிக்கு பெருமாள் கோவில் தோட்டம் முதல் சந்தில்; தலைவர்: எம்.ஆர். சந்திரன்; பேசுவோர்: கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., வி. பி. சிந்தன், எம். ஆர். கண்ணன் எம்எல்.ஏ., எஸ். இராகவானந்தம் எம்.சி., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., கே. எஸ். இலக்குமணன்.

சென்னை 46-வது வட்டம்

அண்ணா குடிசை வாழ்வோர் மன்றத் திறப்புவிழா; இரவு 7 மணிக்கு சன்னியாசிபுரம் (உமா டாக்கீசுக்கு அருகில்); தலைவர்: இரா. அரங்கநாதன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, மைனர் மோசஸ், கே. வி. கேரளீயன், திருச்சி சௌந்தரராசன், அமுதா ராகவன், நா. சு. மணி, பரந்தாமன்.

கொள்ளிடம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு புகைவண்டி நிலைய வீதியில்; தலைவர்: அழகர்சாமி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., கோ. சி. மணி, சொக்கலிங்கம், கொ. சி. அப்பா அரசன்; கொடியேற்றுபவர்: ஆர். ஆர். நாதன்.

சாத்தூர்

எம் ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: கே. சிவ குருநாதன்; பேசுபவர்: பெ. சீனிவாசன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

வெ. கண்ணன்

சுற்றுப்பயணம்

ஜூலை 26: கிருஷ்ணபுரம்; 27: இராமநாதபுரம்; 29: மதுரை; 30: பரமக்குடி; 31: தேரூர்வேலி; ஆக. 5: சென்னை; 6: கோவை; 7: கரூர்; 13: கும்பகோணம். 20: பெங்களூர்.

சென்னை முகவரி:

வெ. கண்ணன், எண் 2, பராங்குசபுரத் தெரு, கோடம்பாக்கம், சென்னை-24.

'நவசக்தி' செய்திக்கு பெரியார் மறுப்பு

சென்னை, ஜூலை 24—

இன்று காலை வெளிவந்த 'நவசக்தி' ஏட்டில் (24—7—67 சென்னைப் பதிப்பு) "தி. மு. க. எழுச்சி நாள் பற்றி தந்தை பெரியார் கருத்து" என்ற தலைப்பில் வெளியாகிய பேட்டிச் செய்தி பற்றி நமது நிருபர், தந்தை பெரியார் அவர்களைக் கண்டு கேட்டபோது, 'நவசக்தி' நிருபர் என்று ஒருவர் நேற்று தம்மிடம் வந்து அறிமுகப்படுத்திக்கொண்டபோதே—'தம்மிடம் வருவதே மிக அதிசயமாக இருக்கிறது' என்று அவரிடமே அய்யா அவர்கள் கூறியதாகவும், பேட்டியில் தாம் கூறியது ஒன்ருகவும், பத்திரிகையில் வெளிவந்திருப்பது முற்றிலும் வேருனதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

—'விடுதலை'

கேரளத்துக்கு அரிசி

தமிழக அரசின் அவசர உதவி

தஞ்சை, ஜூலை 24—

கேரளத்தில் உணவு நிலைமை கடுமையாக இருப்பதால் அதற்கு உடனே 500 டன் அரிசி அனுப்பத் தாம் ஏற்பாடு செய்திருப்பதாகத் தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் செய்தியாளர்களிடம் கூறினர்.

தமிழ் நாடு மின்சாரக் கழகம்

குத்தகை விவர அறிக்கை

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட துணை நிலையங்களில் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுவதற்கான தனித் தனியான முத்திரையிட்ட குத்தகை விபரங்கள் கோரப்படுகின்றன:—

துணை நிலையத்தின் பெயர்	தர விபர எண் (ஸ்பெசிபிகேஷன் நெம்பர்)
1. கழுகுமலை 66/11 கிலோ வோல்ட் துணை நிலையம், திருநெல்வேலி ஜில்லா	GCC 155
2. ஆலங்குளம் 66/11 கிலோ வோல்ட் துணை நிலையம், திருநெல்வேலி ஜில்லா	GCC 156
3. நாகலாபுரம் 66/11 கிலோ வோல்ட் துணை நிலையம், திருநெல்வேலி ஜில்லா	GCC 157
4. புளியங்குடி 66/11 கிலோ வோல்ட் துணை நிலையம், திருநெல்வேலி ஜில்லா	GCC 158

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு துணை நிலையங்களிலும் கட்டப்பட வேண்டிய குடியிருப்புக் கட்டிடங்கள் பின்வருமாறு:—

1. சாலை, நடைபாதை, வேலி, வாயிற் கதவு அமைத்தல்.
2. 'E' வகைக் கட்டிடம் கட்டுதல்—1 பிளாக்.
3. '2-F' வகைக் கட்டிடம் கட்டுதல்—1 பிளாக்.
4. '2-G' வகைக் கட்டிடம் கட்டுதல்—1 பிளாக்.
5. சாக்கடை, சுகாதார வசதிகள் அமைத்தல்.

'தமிழ்நாடு மின்சாரக் கழகம்—குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல்' என்பதுடன், துணை நிலையத்தின் பெயர், தர விபர எண்ணிக்கை (ஸ்பெசிபிகேஷன் நெம்பர்), குத்தகைக்காரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி, முத்திரை செய்த குத்தகை விபரங்கள், கீழ்க் கையொப்பமிட்டவரால் 22—8—67 பிற்பகல் 3-மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்கண்ட வேலைகளுக்கான தர விபரங்களும், வரைபடங்களும் வேண்டுபவர், ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் முப்பத்திநான்கும், எண்பத்தைந்து காசுகளும் (விலை ரூ. 34.00 + வரி ரூ. 0-85); குத்தகை விபர அறிக்கை, அட்டவணை மட்டும் வேண்டுபவர் ஒவ்வொன்றுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் நான்கும், அறுபத்தொன்று காசுகளும் (விலை ரூ. 4-50 + வரி ரூ. 0-11) செலுத்திக் கீழ்க்கண்டவர்களின் அலுவலகங்களில் 25—7—67 தேதிக்கு மேல் பெற்றுக் கொள்ளலாம்.

1. கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம்.
2. 'நிர்வாகப் பொறியாளர், டி. எல். சி., கல்லிடைக் குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா'.

இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

இலாகா பாரத்தில் எழுதாத குத்தகை விபரங்களும், உரிய தேதி, காலம் தவறி வரும் குத்தகை விபரங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர், வேலைகளைப் பிரித்துக்கொடுப்பதற்கும், குறிப்பிட்ட அல்லது எல்லா குத்தகை விபரங்களையும் காரணம் கூருமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை பொறியாளர்,
பொது நிர்மாண வட்டம்,
திருச்சிராப்பள்ளி.

தபால் பெட்டி எண் 86,
மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி-1.

திடீர் விமானத்தாக்குதல்

சமாளிக்க நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 25—

"எந்தத் திடீர் விமானத் தாக்குதலையும் சமாளிக்கப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது"

என்று, மக்களவையில், பாதுகாப்பு அமைச்சர் சுவரண்சிங் உறுதி கூறினர்.

"1965 செப்டம்பரில் இருந்ததைவிட இப்போது பாகிஸ்தானின் விமான பலம் அதிகம்" என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் பெரிய விதைப்பண்ணை

புதுக்கோட்டை வட்டத்தில் அமைகிறது

திருச்சி, ஜூலை 24—

திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டத்திலுள்ள குடுமியான் மலைப்பகுதியில், 4,100 ஏக்கரில் புஞ்சைத் தானியங்களுக்கான விதைப் பண்ணை ஒன்றை அமைக்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இந்தப் பகுதியை முதலமைச்சர் அறிஞர் அண்ணா பார்வையிட்டார்.

பின்தங்கியப் பகுதிகளில் ஒன்ருகக் கருதப்படும் புதுக்கோட்டைக்கு இவ்விதைப் பண்ணை புதுப்பொலிவூட்டுமென்று நம்பப்படுகிறது.

இவ்வளவு பெரிய விதைப் பண்ணை தமிழ்நாட்டில் அமைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

விதைப் பண்ணைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நிலப்பரப்பில் முதலில் 1,000 ஏக்கரில் பண்ணை அமைக்கப்படும்; நிலத்தைச் செம்மைப்படுத்துவதற்கான முதலீடு ரூ. 25 இலட்சம் இருக்குமெனத் தோன்றுகிறது; பண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 10 இலட்சம் வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்படும்; வழக்கம்போல் மத்திய அரசு மறுத்தாலும் இத்திட்டத்தைத் தமிழக அரசே ஏற்று செயல்படுத்தும்.

இப்பண்ணைக்குத் தேவையான தண்ணீருக்காக, வரிசையாகப் பல கிணறுகள் அமைக்கப்படும்.

இப்பண்ணையைப் பற்றி முதலமைச்சர் அண்ணா செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படும் என்று எதிர்பார்க்கிறேன். இதில் பெருமளவு வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வழி இருக்கிறது. பண்ணையை விரைவில் துவங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள்பற்றி அரசு விரைவில் ஆழ்ந்த ஆய்வு நடத்தும்."

மண்ணெண்ணெய் விலை உயருகிறது!

புதுடில்லி, ஜூலை 24—

மண்ணெண்ணெய் விற்பனை விலைக்கான உச்சவரம்பை ஒரு கிலோவுக்கு 67 காசாக உயர்த்தி மத்திய அரசு, அரசிதழில் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஒரு கிலோ என்பது 1.1 லிட்டர் ஆகும்.

இப்போது ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் 50 காசாகும்; உச்சவரம்பு உயர்த்தப்பட்டிருப்பதையடுத்து விற்பனை விலை உயரக்கூடும்.

சூயஸ்கால்வாய் மூடப்பட்டதனல் இரஷ்யாவிலிருந்து இறக்குமதியாகும் மண்ணெண்ணெய்க்கு கப்பல் கட்டணம் உயர்த்தப்பட்டதன் விளைவாக இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

பதுக்கல்நெல் பறிமுதல்

கிருட்டினகிரி, ஜூலை 20—

அரூர் தாசில்தார் — உதவி தாசில்தார்—வழங்குதுறை அதிகாரி—மற்றும் எச்சரிக்கைக் குழுவினர், எலவடை என்னும் ஊரில் கோவிந்தசாமி என்பவரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 200 மூட்டை நெல்லைப் பறிமுதல் செய்தனர்.

அவ்வூரில் மற்றும் சில வீடுகள் சோதனை செய்யப்பட்டு 50 மூட்டை நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு மற்றொரு அநீதி!

டீசல் எஞ்சின் தொழிற்சாலை எண்ணூரில் அமையாதாம்

புதுடில்லி, ஜூலை 24—

சென்னையை அடுத்த எண்ணூரில், கப்பலுக்கான டீசல் எஞ்சின் தயாரிக்கும் தொழிற்சாலை, மத்திய அரசால் நிறுவப்படும் என்று நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

ஆனல், மக்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளித்த மத்திய பாதுகாப்புத் துறை துணை அமைச்சர் பி. ஆர். பகத், அந்தத் தொழிற்சாலையை எண்ணூரில் அமைக்கும் நிலை இல்லையென்றும், அது பீகாரிலுள்ள ராஞ்சியில் நிறுவப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதைப்பற்றி விளக்க முனைந்த அமைச்சர், இந்தத் தொழிற்சாலையை எங்கு அமைப்பது என்பதை ஆய்ந்து கூற அமைக்கப்பட்ட நிபுணர் குழு, ராஞ்சி—விசாகப்பட்டினம்—சென்னை—கொச்சி என்று வரிசைப்படுத்தி இடங்களை அறிவித்ததாகக் கூறியிருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.